சேத்துப்பட்டு வட்டம், ஆரணி வட்டம் ஆகிய வட்டங்களில் உள்ள சுமார் 150 கிராமங்களுக்கும் மேற்பட்ட பகுதிகளை உள்ளடக்கி அந்தப் பத்திரப் பதிவு அலுவலகம் செயல்பட்டு வருகிறது. ஆகவே, இதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல், கழகத் தலைவர், முத்தமிழறிஞர் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் முதலமைச்சராக இருந்தபோது தேசூர் பேரூராட்சியில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் திறக்கப்பட்டிருந்தது. தற்சமயம் அது செயல்படாமல் உள்ளது. அந்த அலுவலகத்தை மீண்டும் செயல்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, படிப்படியாக இந்தச் சார்–பதிவாளர் அலுவலகங்கள் மறு ஆய்வு செய்யப்பட்டவுடன் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப இவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து, கட்டித் தரப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

69—

குடமுழுக்கு

***3125—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, அய்யர்மலை அருள்மிகு ஸ்ரீ இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

2022 ஏப்ரல் 7]

முற்பகல் 10—35

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அய்யர்மலையிலே அமர்ந்திருக்கின்ற அருள்மிகு ஸ்ரீ இரத்தினகிரீஸ்வரர் ஆலயத்திற்கு 2008 ஆம் ஆண்டு குடமுழுக்குச் செய்த பிறகு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் 6—6—2021 அன்று நேரடியாக ஆய்வுக்குச் சென்றிருந்தோம். அந்தவகையிலே இன்றைக்கு அந்தக் குடமுழுக்குப் பணியை எடுத்துக் கொண்டு, தொல்லியல் துறை அனுமதிக்குப் பிறகு மண்டலக் குழுவிலே வைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அடுத்த கட்ட நடவடிக்கையாக மூன்றாவது குழுவான வல்லுநர் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. வல்லுநர் குழுவின் அறிக்கை பெற்றவுடன் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு வெகுவிரைவில் நடத்த ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

குளித்தலை தொகுதிக்குட்பட்ட, அய்யர்மலை என்றழைக்கப்படுகின்ற அருள்மிகு ஸ்ரீ இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயில், கடல் மட்டத்திலிருந்து 1,147 அடி உயரத்திலே அமைந்துள்ளது. 1,017 படிகளைக் கடந்து, உச்சிக்குச் சென்று சிவனை தரிசிக்க வேண்டும். இத்திருத்தலம், நேரடியாக திருநாவுக்கரசரால் பாடல் பெற்ற தலமாகும். இத்திருக்கோயில் நவரத்தினங்களில் ஒன்றான மாணிக்கத்தினால் அமைந்ததனால், இது மாணிக்கன் மலையான் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருக்கின்றது. இந்தத் திருக்கோயிலுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலேயே குடமுழுக்கு நடத்தப்பட்டு, அதன் பிறகு இப்போது மீண்டும் அங்கு குடமுழுக்கு நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதற்காக

அவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கடந்த தி.மு.க. ஆட்சியிலே, இப்பேரவை விவாதத்திலே பங்கேற்கின்ற வாய்ப்பினைப் பெற்ற நான், அப்போதைய முதல்வர் அவர்களிடம் அந்தக் கோயிலின் உச்சிக்குச் சென்று சிவனை தரிசிப்பதற்கு rope car வசதியைச் செய்து தர வேண்டுமென்கின்ற கோரிக்கையை வைத்திருந்தேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு, அதற்காக அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அங்கு rope car அமைப்பதற்கு கடந்த 2–2–2011 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு வந்த ஆட்சியாளர்களால் அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டு, இப்போதுதான் அந்தப் பணி கொஞ்சம் கொஞ்சமாக நடந்து கொண்டிருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் தேதியன்று அந்தக் கோயிலின் உச்சிக்கு நடந்தே வந்து, ஆய்வு மேற்கொண்டு, அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தியிருக்கின்றார்கள். ஆகவே, rope car அமைக்கும் பணி மீண்டும் எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, rope car அமைக்கின்ற பணி 2010 ஆம் ஆண்டு மாண்புமிகு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்திலே அறிவிக்கப்பட்டது. திட்டம் 2015 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும், பல்வேறு இடையூறுகளுக்குப் பின்னால் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் தேதி தேர்தல் அறிவிப்பு அன்று திறப்பு விழா காணப்பட்டிருந்தது. பயன்பாட்டில் இல்லை என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியவுடன் நேரடியாக கள ஆய்வுக்குச் சென்று, பணிகளை இரண்டு முறை ஆய்வு செய்து விரைவுபடுத்தியிருக்கின்றோம். மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், வருகின்ற 16 ஆம் தேதி, அந்த rope car–க்கு உண்டான வெள்ளோட்டம் நடைபெற இருக்கின்றது. அதோடுமட்டுமல்லாமல், அன்றைக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வானரங்களுக்கு குடிப்பதற்கு

2022 ஏப்ரல் 7]

தண்ணீர் இல்லையென்ற ஒரு சூழ்நிலையை கவனத்திற்குக் கொண்டு வந்தார். உடனடியாக ஒரு தண்ணீர் தொட்டியை ஏற்படுத்தித் தந்திருக்கின்றோம். அதேபோல், கழிப்பிட வசதி இல்லையென்று எடுத்துக் கூறினார். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, 31 இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பிட வசதியையும் ஏற்படுத்தித் தந்திருக்கின்றோம். 26 பணிகள்-சுமார் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்ய திட்டமிட்டிருக்கின்றோம். தொல்லியல் துறையின் அனுமதி கிடைத்தவுடன் திருப்பணிகள் துவங்கப்பட்டு, குடமுழுக்கும் நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குளித்தலை நகரத்திலே தட்சிணகாசி என்றழைக்கப்படுகின்ற அருள்மிகு கடம்பவனேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. அந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தது. அது குறித்து தலைவர் கலைஞர் அவர்களின் கடந்த தி.மு.க. ஆட்சியிலே கோரிக்கை வைக்கப்பட்டு, திட்டங்களெல்லாம் தயாரிக்கப்பட்டு, அந்தப் பணிகளைத் துவங்குகின்ற நேரத்திலே ஆட்சி மாற்றத்தினால், அந்தப் பணியும் கிடப்பிலே போடப்பட்டது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திருமண மண்டபத்தைச் சீரமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருமண மண்டபத்தைப் பழுதுபார்க்க வேண்டுமென்ற கோரிக்கையை கடந்த முறை அங்கு ஆய்வுக்குச் சென்றபோது நம்முடைய மாவட்ட அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதற்குண்டான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அனுமதியோடு, மானியக் கோரிக்கையிலே அதனை அறிவிப்பாக வெளியிடவிருக்கின்றோம்.

அதோடுமட்டுமல்லாமல், தற்போது 11 திருக்கோயில்களிலே திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வருகின்ற காலங்களில் கரூர் மாவட்டத்தில் மாத்திரம் 29 திருக்கோயில்களில் திருப்பணிகள் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன. ஆகவே, 12 ஆண்டுகள் கழிந்து ஆகம விதிப்படி குடமுழுக்கு செய்யப்படாத திருக்கோயில்களில் உடனடியாக திருப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதற்காகவும், ஆயிரம் ஆண்டுகள் கடந்த திருக்கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற வேண்டுமென்பதற்காகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே 100 கோடி ரூபாய் நிதி வழங்கியிருக்கின்றார். கேளாததையும், கேட்டதையும் கொடுக்கின்ற அரசு, மாண்புமிகு தமிழக அரசு என்பதை நிரூபித்துக் கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். திருப்பூர் (வடக்கு) சட்டமன்றத் தொகுதியிலுள்ள பெருமாநல்லூரில் அமைந்துள்ள ஈஸ்வரன் கோயில், பெருமாள் கோயில் ஆகிய திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்று 14 ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த ஆண்டு, அத்திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளாமல் கொடுக்கின்ற அரசு, இந்த அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்தப் பெருமாள் கோயிலும் இந்த ஆண்டே திருப்பணிக்காக எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் அறுபடை வீடுகளில் 5 ஆம் படை வீடான திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு, இந்த ஆண்டு ரோப் கார் வசதி ஏற்படுத்தித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோன்று, திருத்தணி கோயிலுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள master plan–ல் எந்தெந்த வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன, என்னென்ன வசதிகள் புதிதாக ஏற்படுத்தப்படவுள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரோப் கார் வசதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தேர்தல் அறிக்கையிலே அறிவித்த 5 ரோப் கார்களில், 3 ரோப் கார்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டுள்ளன. அதில், திருநீர்மலை, திருக்கழுக்குன்றம் மற்றும் திருச்சியைச் சேர்ந்த மலைக்கோட்டை கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களுக்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று அறிக்கை வரப்பெற்றுள்ளது. வருகின்ற காலங்களில், அதற்குண்டான பணிகள் உடனடியாகத் தொடங்கப்படும்.*

திருத்தணி கோயிலைப் பொறுத்தவரையில், ரோப் கார் அமைப்பதற்குண்டான தேவை இல்லையென்று அறிக்கை வரப்பெற்றுள்ளது. இருந்தாலும், அங்கு மாற்றுப் பாதை அமைக்க வேண்டுமென்பது, வெகு நாட்களாக கோரிக்கையாக இருந்து வருகின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, தற்போது, மாவட்ட ஆட்சியர் அவர்களின் கருத்துரு பெறப்பட்டு, அரசாங்கத்திற்கு கோப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆந்திராவைச் சேர்ந்த அதிகமான மக்கள் இத்திருக்கோயிலின் சுவாமி தரிசனத்துக்காக வருவதால், மாற்றுப் பாதை அமைக்கின்ற பணியைத் துரிதப்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். இந்த மானியக் கோரிக்கை பதிலுரையிலே அதற்கான அறிவிப்பை

வெளியிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மலையேறிச் செல்ல முடியாதவர்கள் பேருந்துகளில் செல்வதற்குண்டான வழித்தடம் இருக்கிறது. அந்தச் சாலையும் முழுவதுமாகப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. பக்தர்கள் வசதிக்காக, 2017 ஆம் ஆண்டு இராஜகோபுரம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு, அந்தரத்திலே அந்தப் பணி இருந்தது. அதற்குண்டான 85 படிக்கட்டுகளை சுமார் ரூ.90 இலட்சம் செலவில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டுகின்ற பணியை இப்போது துவக்கியிருக்கிறோம்.

திருத்தணி முருகன் கோயிலில் தங்க திருத்தேர் திருவீதி உலா இல்லாமல், 12 ஆண்டுகளாக மூடியே வைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, உடனடியாக தணிகைமலை முருகனுடைய திருத்தேர், தங்கத் தேர் திருவீதி உலா வைபவம் தொடங்கப்பட்டிருக்கிறது. வெள்ளித் தேர் முழுவதுமாகச் சிதிலமடைந்து, 10 ஆண்டுகளாகப் பயன்பாட்டில் இல்லாமல் இருந்தது. ரூ.4.25 கோடி செலவில் வெள்ளித் தேரையும் புதிதாக உருவாக்குகின்ற பணி தொடங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியைப் பொறுத்தவரையில், தெய்வங்களும் மகிழ்ச்சியாக இருக்கின்ற ஒரு நல்ல சூழ்நிலை தற்போது நிலவிக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.

திரு. எம்.ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்கு உடனடியாக கும்பாபிஷேகம் செய்யப்படுமா என்றும், அங்கு திருடு போன நகைகளை எல்லாம் திரும்பப் பெற்று, சுவாமியினுடைய திருமேனியில் அலங்கரிக்கப்பட வேண்டுமென்றும், கும்பாபிஷேகத்திற்கு முன்பாக தங்க நகைகளை எல்லாம் மீண்டும் பெற்று, திருவுருவத்தில் பொதியப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திருக்கோயிலில் 13 ஆண்டுகளுக்கு முன்பு திருப்பணிகள் தொடங்கப்பட்டன. இதுவரையில் திருப்பணிகள் முடிவுறாமல், நிலுவையில் இருந்தன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், துறை சார்ந்த அதிகாரிகளோடு, மூன்று முறை அங்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டிருக்கின்றோம். ஜூன் மாதத்தில் திருப்பணி நடைபெறும் என்ற அறிவிப்பை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு தெரிவித்துவிட்டு வந்திருக்கிறோம். அதோடு மட்டுமல்லாமல், அங்கு நகைகள் திருடப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்தும் ஆய்வுகளை மேற்கொண்டோம். ஆனால், இதுவரை அப்படி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. தங்க அங்கி சாத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் மெத்த பணிவோடு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், தங்க அங்கி என்பது உடனடியாகச் செய்ய முடியாது. அதைச் செய்வதற்கு ஓராண்டு, இரண்டாண்டுகள் ஆகும். திருப்பணிகள் நடைபெறுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவியாக இருக்க வேண்டும். ஏதாவது ஒரு புதிய ஏற்பாட்டைச் சொல்லி, திருப்பணி மற்றும் குடமுழுக்கு நடைபெறுவதற்கு தாங்கள் எந்த வகையிலும் இடையூறாக இல்லாமல், ஆதரவாக இருந்து, 12 ஆண்டுகள் இறைவன் தரிசனம் செய்ய இல்லாத அந்தத் திருக்கோயிலுக்கு, பக்தர்கள் தரிசனம் செய்வதற்கு நீங்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. J.L. ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், நம்முடைய சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் வணங்குகிறேன். ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, திமிரி ஒன்றியம், வாழபந்தல் ஊராட்சியில் அமைந்துள்ள 1,300 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஸ்ரீ திருகூர் கஜேந்திர வரதராஜ பெருமாள் ஆலயத்தின் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெறவும், விட்டுப்போன*

ராஜகோபுரம், தாயார் மற்றும் ஆண்டாள் சந்நிதி கோபுரங்களை இணைத்து திருப்பணிகள் நடைபெறவும், இந்த நிதியாண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மெத்த பணிவுடன் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு தகவலை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 507 கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதில், 907 பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளன. இந்த 10 மாத ஆட்சிக் காலத்திலே 664 கோடி ரூபாய் அளவிற்கு திருப்பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. நீங்கள் கோரிய வரதராஜ பெருமாள் திருக்கோயிலின் திருப்பணிகளை இந்த ஆண்டே எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு ஆவன செய்யப்படும் என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. ஜெயசங்கரன் அவர்கள்.*

திரு. A.P. ஜெயசங்கரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்கும் திசை நோக்கி வணங்குகிறேன். ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஏத்தாப்பூர் பேரூராட்சியில் அருள்மிகு மனோன்மணி அம்மன் உடனுறை சாம்பவதி ஆலயம் அமைந்துள்ளது. வசிஷ்ட நதியில் அமைந்துள்ள பஞ்சபூத ஆலயங்களில் இந்த ஆலயமும் ஒன்று. இத்திருக்கோயிலைச் சீரமைக்கவும், குடமுழுக்குச் செய்யவும் முந்தைய ஆட்சிக் காலத்தில் அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் முதல்வராக இருந்தபொழுது ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கு ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டது. இத்திருப்பணிகளை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உபயதாரர் நிதி என்றால், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டியதில்லை. நிர்வாக அனுமதி பெற்றே திருப்பணிகளை ஆரம்பிக்கலாம். நீங்கள் கூறியபடி, திருப்பணிகளுக்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தால், நிச்சயமாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இயங்குகின்ற இந்த ஆட்சியில் இன்னார், இனியவர் என்று பார்க்கக் கூடாது; திருக்கோயில் சம்பந்தப்பட்ட திருப்பணிகளுக்கு யார் சிபாரிசு செய்தாலும், வேறுபாடு காணாமல் அதை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்.* (மேசையைத் தட்டும் ஒலி) *அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கேள்விக்கு அவை முடிவடைவதற்குள்ளாக, அவருக்குரிய பதிலை எழுத்து மூலமாக அளிக்கிறேன். நிச்சயம், அப்படி ஒரு நிலை இருக்காது. ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டிருந்தால், திருப்பணிகள் நிறுத்தப்பட்டிருக்காது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயம், மண்டைக்காடு பகவதி அம்மன் திருக்கோயில். இந்தக் கோயில் சமீப காலத்தில் தீப்பிடித்து எரிந்தது. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களும் உடனடியாக வந்து அந்தத் திருக்கோயிலைப் பார்வையிட்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அந்தக் கோயிலுக்கு தங்கக் கோபுரம் அமைத்துத் தர வேண்டுமென்பது, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. அது எந்த நிலையில் உள்ளது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெகுவிரைவில் அதைச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2022 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஜூன் 3 ஆம் தேதி அந்தத் திருக்கோயிலின் கூரை தீப்பிடித்து எரிந்தது. அதுகுறித்து நம்முடைய தீயணைப்புத் துறை மற்றும் காவல் துறையிடமிருந்து அறிக்கை பெறப்பட்டு, அந்தத் திருக்கோயிலைச் சுற்றியிருக்கின்ற பக்தர்கள், திருக்கோயிலைப் புனரமைக்கின்ற பணிக்கு பிரசன்னம் பார்க்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். பிரசன்னம் பார்ப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் நாங்களும் கலந்துகொண்டோம். அதோடுமட்டுமல்லாமல், புனரமைக்கும் பணிகளுக்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சுமார் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கோயிலின் கூரையைச் சீரமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த மாவட்டத்தினுடைய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தத் திருப்பணி துவக்கத்திற்கு வருகை தந்திருந்தார்கள். அந்தத் திருப்பணியைத் தடுப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தடைகள் பல இருந்தாலும், தகர்த்தெறிகின்ற திடத் தோள்கள் இந்த ஆட்சிக்கு உண்டு என்பதை நிரூபிக்கின்ற வகையில், அந்தப் பணிக்கு அடிக்கல் நாட்டிவிட்டு வந்தோம். தங்கக் கோபுரம் வேயப்படுவதைப் பற்றிக் கேட்டார். ஆகம விதிகளுக்குட்பட்டிருந்தால், பிரசன்னம் பார்த்ததிலே அதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருந்தால், நிச்சயம், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்களுடைய கோரிக்கை குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*